மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

ARUN WINGS TRAVELS & TOURS
Smart Fly
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | குரல்: 149 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 12.02.2024 | பக்கங்கள் 11

## பாதணிகளுடன் நுழைந்த பௌத்த தேரர்கள்! வெடுக்குநாறி மலையில் மீண்டும் அட்டூழியம்!!




பக்கம்-04

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பௌத்தபிக்குகள் தலைமையிலான ஒரு குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

## இந்தியாவின் அவசர அழைப்பு! மைத்திரி புதுடெல்லி விரைவு..!



பக்கம்-03

## ஜெனிவா நகர்வுகள் குறித்து விசேட அவதானம் : அமைச்சர் அலி சப்ரி!



பக்கம்-03

## ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின் நாவலுக்கு கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு!






பக்கம்-05

ROLEX HOTEL
360, Galle Road, Wellawatte,Colombo06.
Tel: 011 2360462
340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com
ROLEX HOTEL


# யாழில் கோர விபத்து! நெல் காய வைத்தவர் பலி.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதியதால் வீதியில் நெல் பரவிக்கொண்டிருந்தவர் உயிரிழந் துள்ளார்.
யாழ்ப்பாணம் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் மந்திகையை அண்மித்த பகுதியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.
விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் மந்திகை வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் காய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# பிரதேசவாதத்திற்குத் துணைபோக மாட்டோம்: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுதி!

சிங்கள தேசத்தில் கரைந்து செல்லும் கிழக்கைப் பாதுகாக்க கிழக்குடன் வடக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் விழிப்படைய வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.
மட்டக்களப்பு கல்லடியிலுள்ள ஊடக கற்கை வளநிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

“தமிழ் மக்களின் போராட்டம் கருணா, பிள்ளை யான் ஆகியோரின் உச்சக்கட்டப் பிரதேசவாதம் ஊடாக அழிக்கப்பட்டது.

அவ்வாறு மீண்டும் பிரதேசவாதம் ஊடாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அழித்து ஒழிப்பதற்காகச் செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் போன்ற போலி முகங்களை மக்கள் இனங்கண்டு ஓரங்கட்டவேண்டும்.

பிள்ளையானும் சில முஸ்லீம் அரசியல் கட்சித் தலைவர்களும் வடக்கு கிழக்கு இணையக் கூடாது எனத் தெரிவித்து அவர்களின் அரசியலை அரங் கேற்றி வருகின்றனர்.

வடக்கு கிழக்கிலே உரிமைக்காக பல்லாயிரக்கணக் கான இளைஞர் யுவதிகள் உயிர்த் தியாகம் செய்த நிலையில் இப்படிப்பட்ட குறுகிய இலாபங்களுக்காக பிரதேசவாதங்களைப் பேசி மக்களைச் சிதைக்கின்ற இந்த தரப்புக்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அதேவேளை இவ்வாறான சூழ்நிலையிலே தமிழ் மக்களின் தேசமாக வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும்.
எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் இந்த பிரதேசவாதத் திற்குத் துணைபோக மாட்டோம் என்று தமிழர்கள் கிழக்கு மாகாணத்திலே ஒரு உறுதியான நிலை எடுக்கவேண்டும்” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

TNPF
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

He & She FASHIONS
Ultimate Destination for FASHIONS

NO. 323, 309, KASTHURIYAR ROAD, JAFFNA.

விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# இந்தியாவின் அவசர அழைப்பு! மைத்திரி புதுடெல்லி விரைவு..!



இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய விஜயத்தின் பின்னர், சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைச் சந்திப்பதற்காக அவர் அமெரிக்கா செல்லவுள்ளதாக சுதந்திரக் கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஜெனிவா நகர்வுகள் குறித்து விசேட அவதானம் : அமைச்சர் அலி சப்ரி!



ஜெனிவா நகர்வுகள் குறித்து அங்குள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரின் போது இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்கள் தொடர்பில் மார்ச் மாதம் 4 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் கவனத்தில் கொள்ளப்பட உள்ளது.

இதன்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பு இடம்பெறவுள்ளது.

எவ்வாறாயினும் ஜெனிவா நகர்வுகள் குறித்து அங்குள்ள இலங்கை தூதரகம் ஊடாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் சமகால மனித உரிமைகள் முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளில் அடைந்துள்ள இலக்குகள் தொடர்பில் முழுமையான அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சமர்பிக்க உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இருதய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையில் பிராந்திய ரீதியாக இருதய நோயாளர்கள் பதிவாகின்ற எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தகவலை சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற நிலைமைகளே இதற்குக் காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விளம்பர தொடர்புகளுக்கு
+94 777 163990

# பாதணிகளுடன் நுழைந்த பௌத்த தேரர்கள்! வெடுக்குநாறி மலையில் மீண்டும் அட்டூழியம்!!

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பௌத்தபிக்குகள் தலைமையிலான ஒரு குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

நேற்று (11) இராணுவத்தினரின் பாதுகாப்புடன் குறித்த குழுவினர் அங்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகனத்தினரும் அங்கு பிரசன்னமாகியிந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை ஆலயம் அமைந்துள்ள தங்களது இடம் என குறித்த குழுவினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதனை மறுத்த ஆலய நிர்வாகத்தினர் இது தமது மூதாதையர்களால் பூர்விகமாக வழிபடப்பட்டு வந்த பிரதேசம் என தெரிவித்திருந்தனர்.

அத்துடன் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட குழுவினர் பாதணிகளுடன் உள்நுழைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





தேசியம்
THESIYAM தேசியம்



# ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின் நாவலுக்கு கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு!




ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதிய 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், அவ் அமைப்பின் தலைவரும் ஈழத்து எழுத்தாளருமான தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரான குடாரப்பு தரையிறக்கம் குறித்த இந்த நாவல் வெளியீட்டில் அரங்கம் நிறைந்த மக்கள் வருகை தந்தனர்.

மக்களின் மகத்தான வரவேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவலின் அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்துள்ளன.

நாவல் வெளியீட்டில் முதல் பிரதியினை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட, கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரும் கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவருமான சி. மோகனபவன் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, இலங்கை குமரித் தமிழ் பணி மன்றத்தின் தலைவர் குமரிவேந்தன், பண்டிதர் பரந்தாமன் கலைக் கல்லூரியின் முதல்வர் திரு சௌந்தர்ராஜன், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய முதல்வர் சின்னப்பா நாகேந்திரராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் கி. அலெக்ஷன் வழங்க, வெளியீட்டுரையை கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ. வேழமாலிகிதன் வழங்கினார். விமர்சன உரைகளை ஆசிரியர்களான அ. சத்தியானந்தனும் இராசேந்திரகுமார் காண்டீபனும் வழங்கினர்.

இதேவேளை நிகழ்வில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மதிப்பளிப்பு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள், அரச ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் திரண்டு கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.










# ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு கிடைத்துள்ள பல மில்லியன் டொலர்கள்!

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மூலம் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 487.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டிற்கு கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விடயத்தை தனது டுவிட்டர் சமூக ஊடக கணக்கில் வெளியிட்ட பதிவொன்றின் மூலம் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த வருடம் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜனவரியில் 11.4 வீத அதிகரிப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.
கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் 437.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

இதேவேளை, பெப்ரவரி மாதம் முதல் 8 நாட்களில் 60,122 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.



இதன்படி இந்த ஆண்டு இதுவரை 268,375 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தையில் மீண்டும் முட்டைக்கு தட்டுப்பாடு!

சந்தையில் மீண்டும் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சதொச வர்த்தக நிலையங்களிலும் சில்லறை விற்பனை நிலையங்களிலும் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் முட்டையொன்றின் விலை 60 ரூபாவாக காணப்படுவதுடன், சந்தை காரணிகளுக்கமைய எதிர்காலத்தில் மீண்டும் விலை அதிகரிக்கப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 7 மில்லியன் முட்டைகள் அடுத்த வாரம் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுதாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒன்றரை மாதத்துக்குள் போதைப்பொருள் அற்ற நாடு : தேசபந்து தென்னக்கோன் உறுதி!

போதைப்பொருள் அற்ற நாட்டை இன்னும் ஒன்றரை மாதத்துக்குள் உருவாக்குவோம் என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.
எதிர்காலத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி 2 மாதங்கள் சிறையில் வைத்திருந்து வெளியில் அனுப்பும் முறைமையை இல்லாமல் செய்வோம்.
அதற்குப் பதிலாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, உழைத்த அவரது அனைத்து சொத்துக்களையும் அரச உடமையாக்கும் முறையை நடைமுறைப்படுத்துவோம் என பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், யுக்திய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருளினால் சம்பாதிக்கப்பட்ட 726 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தொடர்பில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு!

தம்மை தீர்க்கதரிசி என்ற அழைத்துக்கொண்ட ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பியபோது கைது செய்யப்படுவதைத் தடுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஜெரோம் பெர்னாண்டோ பௌத்த மதத்தை அவமதித்ததாக குற்றம்சாட்டப்பட்ட நிலையில், அவர் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கான உத்தரவை இரத்து செய்யக்கோரி சட்டடமா அதிபர் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களும் மேன்முறையீட்டு நீதிமன்றில் பாதுகாப்பாக வைக்கப்படுவதையும், அந்த ஆவணங்களை வேறு யாரும் அணுகக் கூடாது என்பதையும் உறுதிப்படுத்துமாறும் நீதிமன்றத்தில் முன்னிலையாக மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ். துரைராஜா மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க, இந்த விடயம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை திரும்பப்பெறத் தமது கட்சித் தயாராக இருப்பதாக நீதிமன்றத்திற்கு அறிவித்தார்

எனினும் இதற்கு சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான மூத்த அரச சட்டத்தரணி சவேந்திர விக்ரம எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.
அத்துடன் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வ சமர்ப்பணங்களை பரிசீலிக்காமல் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எனவே இதனை ஏற்க முடியாது என்று வாதிட்டார் இதனையடுத்து மேல்முறையீட்டைத் தொடர அனுமதி வழங்கிய உயர்நீதிமன்றம், அடுத்த விசாரணையை ஆகஸ்ட் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.




தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 777 163990

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

# பாகிஸ்தான் தேர்தல்.. இராணுவத்திற்கு எதிராக வாக்களித்த மக்கள்!



பாகிஸ்தானில் கடந்த பெப்ரவரி 8ஆம் திகதியன்று தேர்தல் நடைபெற்ற நிலையில், பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் இன்று தேர்தல் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இணையதொடர்பு தட்டுப்பாடு காரணமாக சுமார் 60 மணி நேரம் கடந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வாக்கு எண்ணிக்கையில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளதாக அந்நாட்டு மக்கள் பரவலாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதன்படி, முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் - இன்சாஃப் (Pakistan Tehreek Insaaf) கட்சியை சேர்ந்தவர்கள், முடிவு அறிவிக் கப்பட்ட 264 இடங்களில் 101 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

இம்ரான் கான் கட்சியை சேர்ந்த பலர் சுயேட்சை வேட்பாளர்களாக களம் இறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்ரான் கானின் கட்சியான பிடிஐ தங்களுக்கு கிடைத்திருக்கும் புகழும் வெற்றியும் வெறும் சமூக ஊடக பிம்பத்தால் வந்ததல்ல, உண்மையான மற்றும் அர்ப்பணிப்புள்ள ஆதரவாளர்களைக் கொண்டுள்ளதால் கிடைத்துள்ளது என்பதை நிரூபித்துள்ளது.

பிடிஐ கட்சி அரசு அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மைக்கு குறைவாக 32 இடங்களை பெற்றுள்ளது.

இதேவேளை, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி 73 இடங்களில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

எனினும், முன்னாள் பிரதமரான நவாஸ் ஷெரிஃப் தாங்கள் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

தனது கட்சி மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்துள்ள தாகக் கூறி, மற்றவர்கள் தனது கூட்டணியில் இணையுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், பிலாவல் பூட்டோ ஜர்தாரியின் பாகிஸ் தான் மக்கள் கட்சி வேட்பாளர்கள் 54 இடங்களில் வென்றுள்ளனர்.

இந்நிலையில் இம்ரான் கான் ஜனாதிபதியாவதை தடுக்கும் முயற்சியாக நவாஸ் ஷெரீப் மற்றும் பூட்டோ இருவரும் கூட்டணி ஆட்சி அமைக்க பேச்சு வார்த் தையை தொடங்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# தமிழக முதல்வர் குற்றச்சாட்டு மறுக்கும் சிறிலங்கா கடற்படை!





இந்திய கடற்றொழிலாளர்களை இனந்தெரியாதவர்கள் தாக்குவதாகவும், அவர்களின் கடற்றொழில் கப்பல்களை சேதப்படுத்துவதாகவும் தெரிவித்து தமிழகத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை சிறிலங்கா கடற்படை மறுத்துள்ளது.

நாளாந்தம் நூற்றுக்கும் அதிகமான இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் தொழில் ஈடுபடுகின்றனர்.

இதனை தடுப்பதற்கு சிறிலங்கா கடற்படை சகல முயற்சிகளையும் முன்னெடுத்து வருவதாக கடற்படைப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

எனினும் இது சாத்தியமில்லாத போதே சிலர் கைது செய்யப்படுவதாகவும் இதன்போது கடற்படையினர் ஒருபோதும் அத்துமீறும் இந்திய கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அத்துமீறல் நடவடிக்கைகள் உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் நாட்டின் கடல் பகுதியிலிருந்து விலகி இருக்குமாறு தமிழக கடற்றொழிலாளர்களுக்கு அறிவுறுத்தல் மாத்திரமே விடுக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் இருதரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறலாம் ஆனால் அது நிச்சயமாக தமது கண்காணிப்பில் இல்லை என்றும் கயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இதன்போது, சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்கள் முறையற்ற விதத்தில் நடத்தப்படுவதாகவும், அவர்களையும் அவர்களது படகுகளையும் மீட்பதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தமிழக கடற்றொழிலாளர்களை மீது அடையாளம் தெரியாத குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகவும் மு.க. ஸ்டாலின் இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
077 716 3990-076 567 3339

விளம்பர
தொடர்புகளுக்கு
+94 777 163990

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

**2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.**

**2 பரப்பு - 5,50,000/=**

**20 அடி பாதையுடன்.**

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:
CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும்
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME